

சிவாஜி

ஞாயிறு வாரப்பதிப்பு

கிராம, சமுதாய நல, கலை, இலக்கியப் பத்திரிகை

தாய் மொழி

ஆய்மொழி பற்பல கண்டேன்;-அவற்று
அற்புதம் ஆயிரம் கண்டேன்
தாய்மொழி போலவை ஒன்றும்—மனம்
தன்னை நெகிழ்த்திட வில்லை!

என்மொழி உன்மொழி என்றே—அதில்
ஏற்றம் இறக்கம் உரைக்கும்
புன்மொழி சொல்லிட வில்லை;—உயிர்
போற்றுது தாய்மொழி மெய்யாய்!

தாய்மொழி என்னும் பிணைப்பில்—ஒரு
சக்தி இருக்குது கண்டீர்!
வாய்மொழி இங்கிது; நெஞ்சுள்—வளர்
வண்ணம் தெரிக்கிற தீஞ்சொல்!

வெற்றுரை சொல்ல விரும்பேன்; — நமர்
வேண்டுரை மட்டுமே சொல்வேன்
நற்றுணை யாகிடும் செல்வம்— உயர்
தாய்மொழி நல்கிடும் செல்வம்!

ஆயிரம் ஆயிரம் ஆண்டாய்— வளர்ந்து
ஆக்கம் பெருக்கிய முன்னோர்
சாயினும், அன்னவர் நெஞ்சை— எழுத்து
ஆக்கியே தாய்மொழி நல்கும்!

அன்னை அருத்திய தீம்பா லுடன்
அன்பின் அருத்திய செல்வம்
தன்னின் இனியதும் உண்டோ?— உயர்
தாய்மொழி அத்திரு அன்றோ?

தாய்மையைப்பார்க்கிலும் மேன்மை-இந்தத்
தாரணி யில்பிரி தில்லை!
தூய்மை யுடன்அது தந்த—மொழி
சொல்லரும் பெட்டகம் அன்றோ?

—சாலை இளந்திரை

கல்வித்து... ...ல
...நர்ம்

தற்போது 6–11 வயதுத் தொகுதியில் உள்ள குழந்தைகளில் 60 சதவிகிதமும், 11–14 வயதுத்தொகுதியில் 22.6 சதவிகிதம் பேரும், செகண்டரி கல்விக் கட்டத்தில் 12 சதவிகிதம் பேரும் பள்ளிக்கூடம் சென்று வருகிறார்கள். நமக்கே பிரமிப்புத் தருகின்ற அளவில் இந்த வளர்ச்சி இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

கல்வித்துறையில் நாம் மகத்தான சவால்களை ஏற்றுக்கொண்டு செயலாற்றி வருகிறோம் என்பதைத் தான் இது காட்டுகிறது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதிகப்படியாக மொத்தம் 180 இலட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொ... ...டுவார்கள். ...வித் திட் ...வேற்ற கட் ...மொன்

காங்கோ விவகாரம்

கறுப்பர் நாட்டிலே காட்டுமிராண்டித்தனம்

ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ இந்த ஆண்டுதான் சுதந்திர நாடாயிற்று. அண்மையில் காங்கோவின் ஜனாதிபதியான கசவாபுவுக்கும் பிரதம மந்திரியான லுமும்பாவுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு ஒருவரையொருவர் விலக்கிவிட்டதாக இருவருமே கூறிக்கொண்டனர். இந்தத் தகராறைப் பயன்படுத்திக் கொண்டு, ராணுவ தளபதியான 'மொபுடு' ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு லுமும்பாவை, இரண்டு மாதங்களாக 'வீட்டுக்காவலில்' வைத்திருந்தார். லுமும்பா ... விலி... ந்து தப்பியோடி...

இவ்வார... லுமும்பா கா...

...வில்லுக்குக் கொண்டு வரப்பட்டார். லுமும்பாவை மொபுடுவின் அரசாங்கம் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குகிறது. அவரது விரல் ஒன்றைக் கடித்து விட்டார்கள் என்பதே போதும் அந்தக் காட்டுமிராண்டித்தனத்தை எடுத்துக்காட்ட. லுமும்பாவோ கொஞ்சமும் மனந்தளராமல் நான்தான் பிரதமர் என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

கலவரம் அடங்க ரஷ்யாவின் திட்டம்

லுமும்பா தீர்ந்துபோனார்; இனி அவரைப்பற்றிப் பேச்சே இல்லை என்று மொபுடு கூறு...ார். என் கையில் அதிகாரம் ...க்கிறது; எனவே, எதிர் ...த்தைப் பற்றி யாரும் கவலைப் ...வண்டியதில்லை. இளைஞர் ... கொண்ட அரசாங்கத்தை ...ச் போகிறேன் என்றும் ...கிறார்.

...வின் மனைவியும் ...செய்யப்பட்டிருக்கிறார்.

...ியம் என்ற வெள்ளைக் ... இருந்த உறவை ...ர் நாடு முறித் ... பெல்ஜியத்தி ... ங்கோ விடுதலை ... நாம் அறிந் ...

... கசவாபு, மொபுடு ... லுமும்பாவுக்கு எதி ... விட்டு, காங்கோ ... க் காரணமாக ... ஜியம்தான்என்று ... ாட்டுகிறது.

... ருக்கும் லுமும்பா ... ராணுவ தளபதி ... டையடித்துவிட்டார்

...ர் நிலை பற்றி ...) காரிய ... பிட்டிருக்கி ... ராணுவ ... சிறையில் ... ட்டிருத் ...

...யின்றிக் காட்டுத்தனமாக நடத்தப்படுகிறார் என்றும், அடித்து நொறுக்கியதில் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்றும் லுமும்பா தலையை மொட்டையடித்து விட்டார்கள் என்றும் கைகள் பின்கட்டாகக் கட்டப்பட்டுள்ளன என்றும் உயிருக்கே உலை வைக்கக் கூடிய இருட்டறையில் அடைக்கப்பட்டிருக்கிறார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

காங்கோவில் கலகம் பரவாத படி தடுக்க உலக நாடுகள் (ஐ. நா. சபை) படைகள் போயிருக்கின்றன. இந்தப் படைகளையோ படைகளுக்குவேண்டிய சமான்களையோ, ஆயுதங்களையோ எடுத்துச் செல்லக் கூடாதென்று காங்கோ ரெயில்வேக்கு மொபுடு கட்டளையிட்டிருக்கிறார். இதனால் லுமும்பாவின் ஆதரவாளர்களைப் பிடித்துக் கொல்ல மொபுடுவின் படைகளுக்கு வசதி ஏற்படுகிறது.

லுமும்பாவை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் மொபுடுவின் ராணுவ கூட்டத்தை ஐ. நா. துருப்புகள் நிராயுதபாணிகளாக்க வேண்டும் என்றும் ரஷ்யா வற்புறுத்தி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. காங்கோவில் சமாதான நிலை உருவாக ரஷ்யா 5 அம்சத் திட்டத்தை அறிவித்திருக்கிறது. மாஸ்கோ ரேடியோ இதை ஒலி பரப்பியது,

ரஷ்யா குறிப்பிட்டுள்ள ஐந்து அம்சங்கள் பின்வருமாறு:—

1. கைது செய்யப்பட்ட லுமும்பாவையும் அவரது ஆதரவாளர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

2. மொபுடுவின் ஆட்களிடமிருந்து ஐ. நா. துருப்புகள் ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும்.

3. மொபுடுவின் படைகளுக்கு யார் ஆயுத சப்ளை செய்கின்றனர் என்பதைக் கண்டுபிடிக்க ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் கமிஷன் ஒன்றை நிறுவ வேண்டும்.

4. காங்கோவிலிருந்து எல்லா பெல்ஜிய ராணுவத்தினரையும் அதிகாரிகளையும் வெளியேற்ற வேண்டும்.

5. காங்கோ நிலைமை பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபையும், பொதுச் சபையும் உடனடியாக பரிசீலனை செய்ய வேண்டும்.

"லுமும்பா ஆதரவாளர் மிகுந்த ஸ்டான்லிவில் மாகாணத்தில் தனிப்பட்ட அரசு ஒன்றை நிறுவுவதற்கு எகிப்தும் சூடானும் உதவி செய்யுமானால் நைல் நதியையே வற்றச் செய்யும் முறையில் அதன் இரண்டு பிரதான உபநதிகளை துண்டித்து விடுவேன்" என்று கர்னல் ஜோசப் மொபுடு அறிவித்தார்.

எனது ராணுவத்தினர் அனைவரையும் ஏவி இந்த உபநதிகளின் நீரைத் தடுத்து, நிறுத்தி விடுவேன்," என்று பயமுறுத்தி ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

ஸ்டான்லிவில் மகாணம் காங்கோவிலிருந்து தனியே பிரிந்து செல்ல வழி செய்வேன் என்று ஜில்லா கமிஷனர் பெர்னார்ட் சாலம்பு சென்றவாரம் அறிவித்தார். இதை தொடர்ந்து மொபுடு இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

"ஸ்டான்லிவிலில் தனி அரசு ஒன்றை நிறுவ எகிப்தும் சூடானும் ரகசிய உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டதாக சிகிங் ஈன உபநதிகளின் நீர் எங்களுக்குச் சொந்தமானது; அதை தடுத்து நிறுத்த எங்களுக்கு உரிமை உண்டு" என்று மொபுடு அறிவித்தார்.



சந்திரமண்டலம்

தற்பொழுது பசிபிக் மகா சமுத்திரம் இருக்கும் உலகப் பகுதியின் நிலப்பரப்பே சந்திர மண்டலமாகி இருக்கிறது என்ற கருத்தை சோவியத் பூகோள ஆராய்ச்சியாளர் ஒருவர் ஆதரித்திருக்கிறார்.

சந்திர மண்டலத்தில் ஆகர்ஷண சக்தி கிடையாது என்று சோவியத் வானவெளி ராக்கெட்டிலிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் திரு. நிகோலாய்கார்க்ஸ்கி இந்த முடி வந்து வந்திருக்கிறார்.

துணையாசிரியர் பேச்சு

நாய் வாலை அளவெடுத்து...

கடவுட் காப்பாளர்கள்!

'நாய்வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டி நற்றமிழை எழுத எழுத்தாணி ஆமோ? பேய் வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப் பெரிய விளக்கேற்றிடினும் வீடதாமோ?' என்று எப்போதோ படித்த நினைவு. ஆனல் அந்தப் பாடலின் உண்மை மட்டும் எக்காலத்திற்கும் மாருத—எந்நாட்டுக்கும் பொதுவானகருத்தாகிவிட்டது.

இந்தியாவின் வடக்கு எல்லையில் நமக்கும் சீனவுக்கும் உள்ள தகராறு உலகறிந்ததுதான். நமது வட எல்லையில் பல்லாயிரக் கணக்கான மைல்களை ஆக்ரமித்துக்கொண்டிருக்கும் சீன, தன் நடவடிக்கையில் நியாயம் இருக்கிறது என்று வாதாடுகிறது, இது பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்று நடைபெற்று எத்தகைய முடிவும் காணமல் முறிவு பெற்று வருகின்றன. சில மாதங்களுக்கு முன்பு 'சீனர்களோடு சமாதானமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்' என்று குருஷேவ் 'புத்திமதி' கூறியிருக்கிருர். இப்பிரச்னையில் நமக்கும் சீனர்களுக்குமே சம்பந்தம் உண்டு என்ருல் குருஷேவுக்கு இதில் என்ன வந்தது? 'கம்யூனிஸத்தின் ஏகப் பிரதிநிதி'யான குருஷேவ், உலகையே நாடகமேடையாக்கி, அதில் திறமை வாய்ந்த நடிகராக மாறிக் கொண்டு வருகிருர் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

நம்மோடு நட்புறவு கொள்வது போல் நடித்து, நமது எல்லைப் பகுதியில் தொல்லை விளைவிக்கும் சீனர்களையும் தூண்டிவிடுகிருர். ஆம். பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுவது என்பார்களே அது இதுதான்.

இந்தியாவின் வடக்கு எல்லைப் பகுதிகள் சீனவுக்குச் சொந்தம் என்று காட்டுவது போன்ற படம் ஒன்றை ரஷ்யா வெளியிட்டிருக்கிறது. என்ன இருந்தாலும், ...வும், ரஷ்யாவும் கம்யூனிஸ நாடுகளாயிற்றே, அப்படியிருக்க எப்படி விட்டுக்கொடுக்க முடியும்? இனம் இனத்தோடுதானே...

நாம் பரிகொடுத்துவிட்டுப் பரிதவிக்கிறேம். படல் இல்லாத வீடாக நினைத்துக் கொண்டு ரஷ்யா என் உள்ளே நுழைகிறது?

அடுத்தபடியாக, இந்தியாவிலுள்ள குருஷேவ் பக்தர்கள் இங்கு சீனவின் பத்தினித்தனம் பத்தரை மாற்றுத் தங்கம் போன்றது என்று வாய்கிழியப் பேசுவதும், பேனவின் மூள் (நிப்) தேயும் வரை எழுதுவதும் அவர்கட்குள்ள 'குரு'—பக்தியைத் தானே காட்டுகின்றன.

இனி, இந்த 'ரஷ்யப்படம்' பற்றி இந்திய குருஷேவின் கவனத்திற்குக்கொண்டுவந்ததற்கு கவனிப்பதாக சாவதானமாய்ப் பதில் கூறியிருக்கிருர் குருஷேவ். அவர் எதை கவனிக்கப்போகிருர்? படம் ரஷ்யாவில் வெளியிடப்பட்டதுதான என்பதையா? வட எல்லை சீனவுக்குத்தான் சொந்தம் அல்லது இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்பதையா? இனி அவர் எதை வேண்டுமானலும் கவனிக்கட்டும். அவர் ஒரு சிறந்த நடிகர் என்பதை இந்தியா நன்ருகப் புரிந்து கொண்டு விட்டது என்பதை மட்டும் அவர் நன்ருக கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல அவர் யார் என்பதையும் நன்ருகத் தெரிந்து கொண்டுவிட்டது. இந்தியாவிலுள்ள குருஷேவ் பக்தர்கள் விஷயத்திலும் இந்தியா இனி சற்று கவனமாகவே இருக்கும். ஆம்.

"நாய் வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டி நற்றமிழை எழுத எழுத்தாணியாமோ?....."

கடவுட்காப்பாளர்கள்

ஆண்டவன் சர்வ வல்லமையும் உடையவர்; ஆம். 'எல்லாம் வல்ல' அவர், 'கல்லினுள் தேரைக்கும் கருப்பையுள் முட்டைக்கும் புல்லுணவு தந்து புரக்கும் கருணை நிதி.' அவர் மனித சமுதாயத்தின் போற்றுதலைக்கண்டு பூரிக்காதவர்—தூ...லைக் கண்டு துயரப்பட... 'அங்கிங்கெ... மூர்த்தியாய்' இருப்பவர்; இந்த வையத்தைக் காப்பது தன்கடமை எனக் கொண்டவர். ஆதியும் அந்தமுமில்லா அந்த அருட்சோதி ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதார்? ஆம். இங்கு அவனின்றி ஓரணுவும் அசைவதில்லை இத்தகைய சர்வ வல்லமையுடை தயாபரன், கேவலம் இந்த சமு... யம் தன்னைக் காப்பாற்ற ... டும் என்று கருதியிருப்ப... அவ்வாறு அவர் கருதுவ... அவர் எப்படி சர்... யுடையவராக உ... படைக்கும் ... விளங்கமுடியும்? திருப்பெருந்திரு... களார் கரூரில் நடை... கூட்டத்தில் ... தையும், கட... வேண்டும் ந... கிறேன் என்... ஞர்; முதல... மிருந்துதான் ... பாற்றவேண்டியிரு... குறிப்பிட்டதாக 6-12-60 தினத்த... யாகியிருக்கிறது.

இதைப் பார்... யும் அந்தமும் ... வனுக்கு ஏதே... விட்டதாகவும் ... னின்றும் அந்தச் ... யுள்ள ஆண்ட... காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை என்றும், எனவே இவ்... குள்ள சில 'பிரதிநிதிகள்' அவ... ரைக் காப்பாற்றக் கச்சை கட்டிக் கொ... ...னைந்து நிற்பதாக ... படியிருக்கிறது ... ஆண்டவன்...

இந்தியச் செய்திகள்

கள்ள பாஸ்போர்டுகள் அல்லது விசாக்கள் ஆகியவற்றின் உதவியுடன் இந்தியாவில் பிரவேசிப்பதும், கடும் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு வகை செய்யும்படியாக, 1950-ம் வருஷத்திய இந்திய பாஸ்போர்ட் விதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இந்திய பீனல் கோடில் கள்ள தஸ்தவேஜு தயாரிப்பு தண்டனைக்குரிய ஒரு குற்றமாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இத்தகைய வழக்குகளில் கள்ள பாஸ்போர்ட்டுகளை உடைய சம்பந்தப்பட்ட நபர்கள், பி... ...ந்த ...வஜுகளைத் த...

1960 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து 1960 செப்டம்பர் 30-ந் தேதி வரையில், கள்ள பாஸ்போர்ட்டுகளைப் பயன்படுத்தி வந்ததற்காக வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் 121 பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டனர்.

இது விஷயமாக அந்நிய நாட்டினர் பற்றிய 1948-ம் வருஷத்திய உத்தரவும் திருத்தப்பட்டிருக்கிறது.

★

பெருபாரி நகரத்தை பாகிஸ்தானுக்குக் கொடுப்பது பற்றி டில்லி அரசாங்கத்திற்கும், மேற்கு வங்க அரசாங்கத்திற்கும், தகராறு ஏற்பட்டு, பெருபாரியை பாகிஸ்...ானுக்குக் கொடுக்க டில்லி அர...ங்கத்திற்கு உரிமையில்லை ...று மேற்கு வங்க அரசாங்கம் ... தீர்மானம் நிறைவேற்றியுள் ...

...ம்பந்தமாக இந்தியத் ...மைச்சர் நேருஜி டில்லிசட்டசபையில் ஓர் அறிக்கையைவிடுத்திருக்கிறார். அவ்வறிக்கையில், பெருபாரியை பாகிஸ்தானுக்குக் கொடுப்பது என்ற சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புப்படி டில்லி அரசாங்கம் முடிவு செய்து ஒப்பந்தமும் செய்யப்பட்டது. சட்டப்படி கொடுக்கப்பட்ட பகுதியைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்க மாநில அரசாங்கங்களுக்கு எவ்வித உரிமையையும் அரசியல் சட்டம் வழங்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.



நாட்டில் நாணயப் புழக்கம் வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டே போகும் நிலைமை மக்கள் சபையில் நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் வெளியிட்ட புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாகிறது.

விவசாயம், தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் நியாயமான தேவைகளைப் பொறுத்து மேலும் புழக்கத்தை அதிகரிப்பதுதான் சர்க்காரின் கொள்கையாகும் என்றும் நிதிமந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

அதிகரிப்புக்குப் பல காரணங்கள் உண்டு. உற்பத்தி அதிகரிப்பு வர்த்தக பெருக்கம், பொருளாதார நடவடிக்கைகள் அதிகரிப்பு முதலியவை முக்கிய காரணங்களாகும் என்று அவர் தெரிவித்தார்.

நாணயப் புழக்க குறியீட்டு எண் வருமாறு: 1956-57ல் 118 1957-58-ல் 122; 1958-59-ல் 131; 1959-60 ல் 142.

1948-49 கடைசி வெள்ளிக்கிழமை 100 ஆக இருந்தது என்ற முறையில் இக்கணக்கு வகுக்கப்பட்டது என்றும் நிதி மந்திரி அறிவித்தார்.



நவீன விவசாய முறை போதனை நிலையங்கள், நிர்வாகப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை நிறுவ இந்தியாவுக்குப் பொருளாதார தொழில் நுட்ப உதவியளிப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் சம்மதித்திருப்பதா... ...க்கியோ ...ிநாட்டில் ... ...யை



மேற்படி ஏற்பாட்டின்படி போதனை பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்களை சப்ளை செய்து தொழில் நுட்ப வல்லுநர்களையும் ஜப்பான் அரசாங்கம் அனுப்பி வைக்கும். முக்கியமாக நெல் சாகுபடி நிபுணர்கள் இந்தியாவுக்கு வருவார்கள். அமெரிக்க நிதி நிபுணர்கள் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்தியத் திட்டப்பிரகாரம் இந்தியாவில் ஐந்து இடங்களில் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும். அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு மாதிரி விவசாயப் பண்ணை இருக்கும்.




நகர வாழ்க்கையின் நெருக்கடியும் தொல்லைகளும்தான் இந்தியாவில் இருதயநோய் சிறிதளவு அதிகரித்திருப்பதற்கு முக்கிய காரணமென யூனியன் சுகாதார மந்திரி கர்மார்கர் கூறினார்.

இருதய நோயினால் மரணம் சம்பவிப்பது இந்தியாவில் அதிகரித்திருப்பதைப் பற்றி லோக் சபையில் கவலை தெரிவிக்கப்பட்டது. சிறிதளவே உயர்ந்துள்ளதாக கர்மார்கர் தைரியம் கூறினார். மேற்கு நாடுகளில் இருதய நோய்க்கு காரணம் கொழுப்பு சத்துள்ள உணவுகளை அதிகம் உட்கொள்ளுவதுதான் என்று கூறப்படுவதாகவும், ஆனால் அப்படிப்பட்ட உணவு ஏராளமாக உண்பதற்கு இங்கு பெரும்பான்மையோருக்கு சந்தர்ப்பமே இல்லையென்றும் அவர் கூறினார். விசாலமான காற்றோட்டமான இடங்களிலிருந்து பழகியவர்கள் நகரங்களின் நெருக்கடியில் வசிக்க வேண்டியிருப்பதும், நகர வாழ்வின் அவசரம், தொல்லைகளுமே இந்தியாவில் இருதய நோய் அதிகரிப்புக்கு காரணமாகும் என்றார்.



டில்லியில் இவ்வாண்டு ஆகஸ்ட் 27-ந் தேதி இரவு ஏற்பட்ட பூகம்பத்தினால் மத்திய பொது மராமத்து இலாகாவின் பராமரிப்பின் கீழுள்ள பொதுக் கட்டடங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம், அதாவது பழுது பார்க்கும் செலவு சுமார் ரூபாய் 5,22,000. பழுது பார்க்கும் வேலை இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



கரூரில்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஊழியர் சங்கம்

"ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் அரசாங்கம் அல்ல– அது ஒரு தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனம். அந்த ஸ்தாபனம் அதிகமான லாபம் ஈட்டும் பொழுது அதில் பங்கு பெற ஊழியர்களுக்கு முழு உரிமையுண்டு" என்று நமது ஆசிரியர் திரு. திருலோகசீதாராம் 5-12-60 ல் கரூரில் நடந்த இன்ஷூரன்ஸ் ஊழியர் சங்கக் கூட்டத்தில் அவர்கள் கோரிக்கைகளின் நியாயத்தை ஆதரித்துப் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

கரூர் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்பொரேஷன் ஊழியர் கோரிக்கை தினக் கூட்டம், அந்த நிறுவனத்தின் ஊழியர் திரு. ஆர். சுப்புரத்தினம் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் துணைச் செயலாளர், திருவாளர் அரு. வள்ளியப்பன், பி. ஏ., வரவேற்றார். இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு தாங்கள் ரூ. 25 கேட்பதிலுள்ள நியாயத்தைத் திருவாளர்கள் எஸ். பி. ரகுநாதன், எம். எஸ். சையது இப்ராகீம், பி ஏ., வி. கோபாலன் முதலானோர் விளக்கிப் பேசினர். திருவாளர்கள் திருலோக சீதாராம், சோமு (கம்யூனிஸ்ட் கட்சி) கரிகாலன் (தி. மு. க.) ஜே. வி. ராமசாமி பிள்ளை (பீல்டு ஆபீசர்கள் சங்கம்) சங்கரலிங்கம், சங்கரநாராயணன் (பாங்கு ஊழியர் சங்கம்) முதலியோர் இன்ஷூரன்ஸ் ஊழியர்களின் கோரிக்கையை ஆதரித்துப் பேசினார்கள். கரூர் நகர காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் திரு. கோவிந்தராச பிள்ளையும் கூட்டத்தில் பேசினார்.

பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



இலங்கைசெல்லும் இந்திய வர்த்தகர்

இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு விசா வழங்குமாறு வேண்டி இந்திய வர்த்தகர்கள் சமர்ப்பிக்கும் மனுக்களைப்பற்றி ஆலோசிக்க இந்தியாவிலிலுள்ள இந்திய ஹைகமிஷனர் சம்மதம் தெரிவி... ளார். ஆனால் வர்த்தகர்களின் மனுக்களை ஏற்றுமதி விஸ்தரிப்பு டைரக்டர் சிபாரிசு செய்யவேண்டும் என்று ஹைகமிஷனர் ஒரு நிபந்தனை விதித்துள்ளார்.

ஏற்றுமதி அபிவிருத்திசம்பந்தமான தகவல்கள் உள்பட உத்தேசிக்கப்பட்டுள்ள "சிட்"கள் பற்றிய முழு விபரங்களும் மனுக்களில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.



திரை அகன்றது

சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலில் 2-வது பிராகாரத்தில் கொடி மரத்திலிருந்து நிருத்த சபைக்குபோகும் வழியில் கீழ்புறம் பிராகாரத்தின் மண்டபத்தின் முதல் கருங்கல் தூணில் [பெருத்த சுற்றளவு உள்ள ஒரே தூண்] சுமார் 60 ஆண்டுகளாக சுண்ணாம்பு கற்களால் மறைத்து வைக்கப்பட்டுள்ள சிற்பக் கலைகள் பெரிதும் புகழக்கூடிய இரு விக்கிரகங்கள், தேவஸ்தான காரியதரிசி 'சங்கீத வித்துவான்' ஸ்ரீ நடராஜ தீக்ஷிதரின் பெரும்முயற்சியால் மறைப்புகள் அப்புறப்படுத்தப்பட்டு இரு விக்ரகங்களும் இப்போது மக்களுக்குக் கண் கொள்ளா காட்சிகளை அளித்துக்கொண்டு வருகின்றன.

மேற்படி தூணின் மேல் புறத்தில் சுமார் 5 அடி உயரத்தில் கால சம்ஹார மூர்த்தி காட்சி அளிக்கின்றார். மேற்படி கால சம்ஹார மூர்த்தியின் வடபுறம் மார்க்கண்டேயர் நடுவிலுள்ள சிவலிங்கப் பெருமானைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் காட்சியுடனும் தென்புறத்தில் எருமை வாகனத்தில் காலன் ஏறிக்கொண்டு பாசக்கயிற்றை மார்க்கண்டேயர்மீது வீசும் காட்சியுடனும் மேற்படி தூணின் வடபுறத்தில் சுமார் நாலரை அடி உயரத்தில் கங்காதேவி சிரசின்மீது இருக்கும் காட்சியுடனும் சோமாஸ்கந்தர் விக்கிரகமும் அந்தப் பெருந்தூணிலே ஒரே கருங்கல்லில் காட்சி அளிக்கிறது.

மேற்படி இரு மூர்த்திகளுக்கும் உடன் எண்ணெய் காப்பு செய்து புஷ்பங்களால் நன்றாக அலங்...ய்து ஆராதனைகள் ...



அமுத வாக்கு

அறிவைப் பல விஷயங்களிலே சிரத்தையுடன் செலுத்தி உழைப்பதனால் சக்தி உண்டாகிறது.

அசே...

பா...

ஆபாசச்...

மக்களின் மனத்...

கெடுக்கும் வன்...
அருவருக்கத்...
ரொட்டிகளை...
திற்கென மூலை...
லாம் ஒட்டப்ப...
தடுப்பதற்காக...
வோதய இபக்க...
பாவேயின் ஆ...
ரில் கிளர்ச்சி...
சுவரொட்டி...
செருப்புக்கி...

பொதுவி...
சுவரொட்டிக...
தடை செய்...
யான சட்ட...
இந்திய சர்க்க...
வருவதாகத் ெ...

கைத்...

ஶ்ரீ...



ஊன்றிய கொள்கையும் ஒன்றே கணந்தொறும்
தோன்றும் கடமைகள் ஆற்றுதல் நன்றே

ஒலி 26] 11—12—1960 [வாரம் 6

ஏற்ற இடம்

திருச்சியி... ...ல்புகள் பற்றி நாம் எவ்வளவு
...ன் பேசி... ...க்துக் கொண்டாலும், அது
...ஒரு மிகப் பிற்போக்கான
...ண்மையை நாம் ஒத்துக்
...தனை நாம் மறப்பதோ,

...ன்சார இயந்திரங்
...ழிற்சாலை ஒன்
...தந்த இடத்
...க்கோணம்,
...று ஆராய்ச்சி
...கரளாவிலும் சில
...அதன்பிறகு,
...காக இல்லை
...இருந்தாலும்
...த்துத் தெரி

...வேறிடங்களை
...னர் குழுவினர்
...னர். அரக்
...ீர் வளமும்
...ளரே தெரி
...அங்கு சில
...திருச்சிக்கு
...லை அமைப்
...என்று கரு
...யான வசதி
...ல் நீர்ப்பிரச்
...காமராஜ்

...ஆயிரம்
...கட்டாந்
...து. அத்

மேலும், அண்மையில் நடைபெற்ற திருச்சி நகர் மன்றக் கூட்டத்தில், மேற்படி கனரக மின்சாரத் தொழிற்சாலையைத் திருச்சியில் அமைத்து உதவுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டும், இதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வதாக உறுதி கூறியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகள், 'தகுந்த இடங்களை'த் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இவ்வளவு வசதியும், வாய்ப்பும், ஒத்துழைப்பும் இருக்கும் போது, 'நிபுணர்கள்' திருச்சியைத் தட்டிக் கழிக்காமல் 'சிபாரிசு' செய்வார்களென்றே நம்புகிறோம்; அதுவே முறையானது என்று கூடக் கூறலாம்.

சேஷசாயி நினைவு பொறியியற் கல்லூரி

திருச்சியில் என்ஜினீயரிங் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது திருச்சி மக்களின் நெடுநாளையக் கோரிக்கையாகும். இதற்கு அரசாங்கமும் அனுமதி கொடுத்து விட்டது. அதன்படி ரூ. 32 லட்சம் செலவில் என்ஜினீரியங் கல்லூரி கட்ட சேஷசாயி மின்சார சப்ளை நிலையம் முன் வந்துள்ளது. திருச்சி நகர சபையும் ரூ. 2 லட்சம் கொடுக்க முடிவு செய்துள்ளது. ஸ்ரீரங்கம் நகரசபையும் ஷை கல்லூரிக்கு ரூ. 10 ஆயிரம் கொடுக்க முடிவு செய்துள்ளது.

இந்தக் கல்லூரியை திருச்சியை அடுத்த சமயபுரத்தில் கட்டுவதா? அல்லது காஜாமலை அருகில் கட்டுவதா? என்று கல்லூரிக் கமிட்டியார் ஆலோசனை செய்து வருகிறார்கள். 1961 ஜுலை மாதத்தில் இருந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். கட்டிடம் கட்டி முடிந்ததும் வகுப்புக்கள் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படும் என்று தெரிகிறது.

இந்தக் கல்லூரிக்கு "சேஷசாயி நினைவு என்ஜினீயரிங் கல்லூரி" என்று பெயர் வைத்து இருக்கிறார்கள்.



திருச்சி நகர காங்கிரஸ் கமிட்டி

திருச்சி மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் 5ந் தேதி திரு. ஆர். ராஜகோபால் பிள்ளை தலைமையில் நடைபெற்ற நகர காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், 1960-ம் வருடத்... ...அங்கத்
...ர்கள் சேர்... ...60 க்

...கங்களை அலுவலகத்தில் கொடுத்தால்தான் மண்டல காங்கிரஸ் கமிட்டிப் பரிசு ரூ. 150 பெறலாம் என்றும் நகர கமிட்டிக்கும் ரூ. 250 பரிசாக வழங்கமுடியும் என்றும் நகர காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களுக்கு கூட்ட அழைப்பு அனுப்பும்போது நகரிலுள்ள எல்லா மண்டல காங்கிரஸ் செயலாளர்களுக்கும் விசேஷ அழைப்பு அனுப்புமாறு கேட்டுக் கொண்டும், திருச்சி நகர இளைஞர் காங்கிரஸ் கன்வீனராக திரு. என். கிருஷ்ணனை நியமனம் செய்தும், தியாகி திரு. டி. எஸ். அருணாசலம் எம். எல் சி. யின் பிறந்தின விழாவை 11—12—60 ல் கொண்டாடுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயலாளர் திரு. கே. வி. செல்லப்பன் நன்றி கூறினார்.

பிளாஸ்டிக் நாணயம்

பிரிட்டிஷ் அரசாங்க நாணயம் அச்சிடும் ஸ்தாபனம் வெளியிட்ட வருடாந்திர அறிக்கையொன்றில், சிறு மதிப்புள்ள நாணயங்களை பிளாஸ்டிக்கில் தயாரிப்பது பற்றி ஒரு ஆராய்வுக்கட்டுரைவெளியாகியுள்ளது. எத்தனையோ விதங்களில் பிளாஸ்டிக் பயன்படுவதால் நாணயம் அச்சிடுவதற்கும் அதைப் பயன் படுத்துவது பற்றி ஆலோசிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. உலோகங்களைத் தவிர்த்த மற்ற பொருட்கள் ஸ்யாம், இன்னும் பலநாடுகளில் சில சமயங்களில் உபயோகிக்கப்பட்டதை எடுத்துக்கூறியுள்ளது இந்தக் கட்டுரை.

பிளாஸ்டிக்கினால்செய்யப்பட்ட நாணயங்கள் இலேசாக இருப்பது அதிக சௌகரியமென்று கூறப்பட்டுள்ளது. ஆனால் கள்ள நாணயம் அடிப்பதை இது எளி...குமென்பது கவனிக்க வேண்...
...சேபமாகும்.

அவர்கள் கருத்து:

வரதட்சணை மசோதா

தினமணி 1—12—60

வரதட்சணை வழக்கம் போன்ற கொடிய பாதகம் வேறு இருக்க முடியாது. மனிதாபிமான அம்சத்தில் பார்த்தால் இதைப் போன்ற ராட்சச வழக்கம் வேறு இருக்க முடியாது என்று கூறலாம். இந்த வரதட்சணை வழக்கத்தின் பலனாக எத்தனை பெண்கள் இன்ப வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் உள்ளம் உருகிக்கண்ணீர் வடிக்கின்றனர். கல்யாணமான பின்னர் கூட கொடுபடாமல் இருந்த வரதட்சணை "பழையபாக்கி"க்காக எத்தனை பெண்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு ரத்தக்கண்ணீர் வடிக்கின்றனர். எத்தனையோ பெற்றோர்கள் வயிறு எரிந்து நலிகின்றனர்.

'பெண்களை இந்தியர் அடிமைப்படுத்துகின்றனர். கொடுமைப்படுத்துகின்றனர்' என்றெல்லாம் வெளி நாட்டார் எழுதலாம். அவர்கள் என்னதான் எழுதினாலும் ஹிந்து குடும்பத்தில் சுபாசுபகாரியங்களில் விசேஷமாகக் கல்யாண விஷயத்தில் இறுதி அதிகாரம் இன்னமும் பெண்கள் கையில் தான் இருக்கிறது. பெண் இனத்தைக் காக்கப் பெண்கள் செய்யக்கூடிய நல்ல காரியம் எதாவது உண்டென்றால் அது வரதட்சணைக் கொடுமையை ஒழிப்பது தான் ஆகும். பெண்கள் மனம் வைத்தால் இந்த வரதட்சணைக் கொடுமை ஒழிவதும் கல்யாண ஆடம்பரச் செலவு குறைவதும் நொடியில் நிகழ்ந்து விடும். ஆண்கள் சிலருக்கும் இந்த வரதட்சணை என்ற சுலபக் கொள்ளையில் ஆசை உண்டு. வரதட்சணை என்பது இரண்டு புறமும் கூர்மையுள்ள கத்தியாகும். இன்று வரதட்சணை வாங்கும் ஒருவருக்குப் பிற்காலத்தில் பெண்ணே பிறக்காது என்று உத்தரவாதம் கூறமுடியாது." இன்று வரதட்சணை வாங்கியவனை அதே வரதட்சணை அவன் கழுத்தை அறுக்கும் கருவியாக பெண் உருவத்தில் அவனிடம் அவதாரமெடுக்கும் என்பதை வரதட்சணை கேட்பவர்களும் வாங்குபவர்களும் மறக்கக்கூடாது. பெண் கண்ணீர் விட்ட குடும்பமோ தேசமோ நாசமடையும் என்பது நமது மூதாதையர்களின் வாக்கு. பெண் இனத்தின் கண்ணீரைத் துடைக்க இந்த வரதட்சணைப்பேய் வழக்கத்துக்கு சாவு மணி அடிக்கும் தீர்கள் எழும்நாளே நம் பண்பு பூர்ணத்துவமடைந்த நாளாகும்.

ஃ ஃ

சுதேசமித்திரன் 2—12—60

லோக் சபை செய்துள்ள ஒரு திருத்தத்தின்படி "வரதட்சணை கேட்பதும்" ஒரு கொடிய குற்றமாகும். விவாகத்தில் ஒரு தரப்பார் வரதட்சணை கேட்டு, அது கொடுக்கப்பட்டதன் பேரில் கல்யாணம் நடந்திருக்குமாயின் அதன்பேரில் எழும் வழக்குகளில் திட்டமான சாட்சியம் கிடைப்பது கஷ்டம். ஏனெனில் விவாகம் நடந்தபின் பெண் வீட்டார் பிள்ளை வீட்டாருக்கு எதிராக கோர்ட்டுக்கு வந்து சாட்சியம் சொல்லத் துணியார். பிள்ளை வீட்டார் வரதட்சணை கேட்டு அதுபற்றி உடன்பாடு ஏற்படாத நிலையில், பெண் வீட்டார் அவர்கள் மீது வழக்குத் தொடுக்க முன்வரலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் பிள்ளை வீட்டாரைத் தண்டிப்பது பொருத்தமென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் வரதட்சணையைத் தவிர வேறு காரணங்களால் விவாகம் நடக்காமல் போகும் சந்தர்ப்பங்களிலும், பிள்ளை வீட்டார் மீது பொய் வழக்குகள் ஜோடிக்க மேற்குறித்த திருத்தம் இடங்கொடுக்கும். மாச்சரியம் மிகுந்த கிராமாந்திரங்களில் ஒருவரையொருவர் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவும் இந்த ஷரத்து உபயோகித்துக்கொள்ளப்படலாம் என்று சட்ட மந்திரி எடுத்துக் காட்டியிருக்கிறார். மேற்குறித்தது போன்ற கோளாறுகளுக்கு இடங்கொடாத வகையில் லோக்சபை ராஜ்ய சபைக் கலப்புக் கூட்டத்தில் வரதட்சணைச் சட்டம் உருவாகுமா என்று தெரிய வேண்டும்.

நவ இந்தியா 6—12—60

"வரதட்சணை கேட்பதை" தண்டிக்கத்தக்க குற்றமாக்கும் ஷரத்தை ராஜ்யசபை ஆட்சேபிக்கின்றது. அத்தகைய ஷரத்து இல்லாவிடில் வரதட்சணை தடுப்பு மசோதா உயிர் அற்ற ஒரு முயற்சி ஆகிவிடும் என்பது கண்கூடு. அத்தகைய ஷரத்து இன்றியமையாதது என்பது மக்கள் சபையின் கட்சி. தண்டனை ஷரத்து இருப்பதால் மட்டும் இந்தத் தீங்கைப் பூண்டோடு அறுப்பது சாத்தியம் என்று கூறிவிட முடியாது; எனினும் ஓர் அளவு பயன் விளைவிக்க வேணும், அது உதவியாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது. 'பகிரங்கமாக' வேணும் மக்கள் வரதட்சணை வழக்கத்தில் ஈடுபடமாட்டார்கள், அல்லவா? சட்டத்துடன், மக்களிடையே கருத்தும் உருவாக்கப்பட்டால் நாளடைவில் வரதட்சணை ஒழிப்பு சாத்தியமாகும்.

மற்றொரு அடிப்படை விஷய... திலும் இரு சபைகளும் வேறுப...

...கின்றன. ரொக்கத்தை மட்டுமின்றி எல்லா வெகுமதிகள், சீதனங்களையும் தடைசெய்ய வேண்டும் என்பது ராஜ்யசபையின் வ... தம். ஆனால் யதார்த்த நிலையில் இது சாத்தியமோ அல்லது விரும்பத்தக்கதோ இல்லை.

எப்படி இருப்பினும் பெண் மக்களின் முன்னேற்றத்திற்கும் மன அமைதிக்கும் முட்டுக்கட்டையாக நிற்கும் இந்த வரதட்சணைக் கொடுமை சமுதாயத்திலிருந்து வேர் ... வது அவசியம். அ... தை மக்களி... அதே ச...





மணமும் நிறமும்

உணவுப் பொருள்களிலும் பானங்களிலும் மணத்திற்காகவும் கவர்ச்சிகரமான வர்ணத்திற்காகவும் சேர்க்கும் பொருள்களால் உடலுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்வதற்காக பிரிட்டனில் புதியதோர் ஆராய்ச்சிச் சங்கத்தை நிறுவியிருக்கிறார்கள். உணவுப் பொருள்கள், பானங்கள், முகப் பூச்சுக்கான சுகந்தப் பொடி, மெழுகு, உதட்டுச் சாயம், சிகையலங்காரத்திற்கான தைலங்கள்–வாசனைத் திரவியங்கள் முதலியவற்றில் சேர்க்கப்படும் மணமூட்டும் பொருள்களும் வர்ணங்களும் சிறுகச்சிறுக உடலில் சேர்ந்து நீண்ட காலத்திற்குப் பிறகு உடலைப் பாதிக்கக் கூடும் என்ற கருத்து உறுதிப்பட்டு வருவதால் ... துறையில் சோதனை ... ன் ... டஸ்ட்ரியல் ...

" ராடர் "

பூமியில் இறங்கிய விமானங்கள் மிகவும் பத்திரமாகவும் திறமையாகவும் கட்டுப்படுத்தப்பட வகை செய்யும் தனி வகை 'ராடர்' ஏற்பாடுகள் விரைவில் அமெரிக்காவிலுள்ள முக்கியமான விமான நிலையங்களில் நிறுவப்படும். மத்திய அரசாங்க விமானப் போக்குவரத்து இலாகா புதிய 'ராடர்' இயந்திரங்களை வரவழைக்கின்றது. அவை 9 விமான நிலையங்களில் நிறுவப்படும். புதிய கருவி விமானங்கள் ஓடும் பாதைகளையும் பார்க்கவல்லது; பாதை பரப்பின் அமைப்பையும் விமானம் அதில் ஓடுவதையும் போக்குவரத்துக் கட்டுப்பாடு நிலையத்திலுள்ள திரையில் தெளிவாகப் பார்க்க முடியும். இந்தப் படத்திலிருந்து, பூமியிலிருந்து போக்குவரத்தைக் கட்டுப்படுத்துகிறவர், திறமையாக விமானத்தைக் கட்டுப்படுத்தலாம். இதனால் விமானங்கள் ...மோதாமல் தடுக்கப்படுகின்றன. ...ாக்குவரத்து நெரிசலும் தவிர்க்...டுகிறது.



...ாய்கறி

...ந்திரம்

...கலாசாலையைப் ...சாழில் நுட்பப் ... அன்னுசிச் ...ளி, முட்டை ... கெட்டுவிடா... சம்பந்தமான ...டைபெற்று

காரிலிருந்தே டெலிபோன்

விரைந்து செல்லுகின்ற காரில் இருந்தவாறே இனி நாம் நமது நண்பர்களோடு டெலிபோனில் பேசமுடியும். டெலிபோன் பொருத்தப்பட்ட கார்கள் இப்போது பல்கேரியாவில் சர்வ சாதாரணமாகிவிட்டன.

வெய்யில் தட்டி

கடை முகப்புக் காட்சி மேடையிலுள்ள பொருள்கள் மீது வெயில்பட்டால் சேதமேற்படும். கடைக்காரர்கள் அவைமீது வெயில் படாதிருக்கத் திரையிடுவதுண்டு. எலக்ட்ரோமாடிக் ஷாப்பிளைன்ட்ஸ் என்ற லண்டன் நிறுவனம் 'டிரான்ஸிஸ்டரைஸ்டு கன்ட்ரோலுள்ள' வெயில் தட்டி ஒன்றைத் தயாரித்திருக்கிறது. மேலும் கீழுமாக இழுக்கக்கூடிய இந்தத் தட்டி, சூரீர் என்று வெயிலடிக்கும்போது கீழே இறங்கி பொருள்கள்மீது வெயில் சாயச்சாய தானே மேலே ஏறிச் செல்கிறது.

புதுக்கோட்டை டி. மு. கோர்ட்
S. C. 1272/60

ரெங்கன் இருங்குளவன்–வாதி
மாரிமூசி —பிரதிவாதி

வாதிக்கு நீர் 6—9—47 ல் ரூ. 120க்கு எழுதிக் கொடுத்திருக்கும் புரோநோட்டின் பேரில் ஏற்பட்ட தாவாவின் பேரில் விசாரணை 24–12–60 ல் நீர் ஆஜராகாவிட்டால் ஒருதலைபட்சமாகத் தீர்ப்பு செய்யப்படும்.

கி. ராஜாமணி
வாதி அட்வகேட்

4 | 4047 | 200

துறையூர் டி. மு. கோ
O. S. 580/56 E. P. 256/60

கோவிந்த முத்துராஜா—வாதி
1. அரப்புளிமூப்பன் 2 இராமசாமி மூப்பன் —பிரதிவாதிகள்

இந்த நம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் ஈட்டு டிகிரி பெற்று அதை நிறைவேற்றி ஏல நோட்டீசில் வாயிதா 12–12–60 ல் விசாரணை. ஆக்ஷேபனையை ஷை தேதியில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

M.R. இராஜ... பிள்ளை
... | 4048 | 2... ...கேட்

குளித்தலை டி. மு. கோ
O. S. 124 / 59

சிதம்பரம் செட்டியார் —வாதி
சின்னச்சாமி பிள்ளை வகையரு
—பிரதிவாதிகள்

5ம் பிரதிவாதிக்கு தெரிவிப்பது. வாதியால் டிக்ளரேஷனுக்கும் பர்மனென்ட் இன்ஜெங்ஷன் வகையருவுக்கும் பிரதிவாதிகள் பேரில் போடப்பட்ட தாவாவில் 13—12—60 ல் உங்கள் ஆக்ஷேபனை தெரிவிக்க வாய்தா போடப்பட்டிருக்கிறது.

எஸ். ராமானுஜம்
அட்வகேட்

1 | 4044 | 197

திருச்சி டி. மு. கோர்ட்
O. S. 327 / 60

T. N. முத்துகிருஷ்ணன் வகையரு —வாதிகள்
ராமசாமி முத்து ராஜா —பிரதிவாதி

வாதிகள் தங்கள் பேரில் செ... திருக்கும் இந்த ஈட்டு கடன் பத்திர தாவா 13—12—60 ல் விசாரணை. அன்று தங்கள் கக்ஷியை தெரிவிக்கத் தவறினால் Exparte ஆக முடிவடையும்.

G. பாலசுந்திரம்
அட்வகேட்

2 | 4045 | 198

குளித்தலை டி. மு. கோ
O. S. 461 / 1960

குளித்தலை S. துக்காராம் செட்டியார் —வாதி
கு தா. சிவாயம் மலையடிவாரம் பழனியப்பபிள்ளை குமாரர் P. தங்கவேல்பிள்ளை –3ம் பிரதிவாதி

ஷை நம்பரில் வாதி பிரதிவாதிகள் வகையரா பேரில் பாகம், மத்யகால வரும்படி வகையரா கிடைக்க தாவா செய்து 14–12–1960 ல் வாய்தா. ஆக்ஷேபனை உள்ளவர்கள் அன்று ஷை கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ளலாம்.

K. திருவேங்கடாச்சாரியார்
வக்கீல்

3 | 4046 | 199

ஏர் மார்ஷல்

... வாழ்க்கை வரலாறு ...

இந்திய விமானப் படையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஏர் மார்ஷல் அஸ்பி மெர்வான் எஞ்சினியர், டி. எப். ஸி., 1958 மே மாதத்திலிருந்து பெங்களூரிலுள்ள "ஹிந்துஸ்தான் ஏர் கிராப்ட் லிமிட்டெட்" ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டராக இருந்துவருகிறார்.

ஏர்மார்ஷல் எஞ்சினியர் தமது சொந்த ஊராகிய பம்பாய்க்கு அருகிலுள்ள பஞ்சகனி என்னும் கோடை வாசஸ்தலத்தில் தமது ஆரம்பக் கல்வியையும், பிறகு கராச்சியிலுள்ள "டி. ஜே. சிந்த் கல்லூரியில்" கல்லூரிப் படிப்பையும் முடித்துக் கொண்டு, கிரான்வெலில் விமானப் படைப் பயிற்சி பெற்றார். ராயல் விமானப் படையின் இந்தப் பிரபல விமானப் பயிற்சிக் கழகத்தில் பட்டம் பெறும் சமயத்தில், அவர் "எல்லா அம்சங்களிலும் மிகச் சிறந்த விமானியாகத் தெரிந்தெடுக்கப்பட்டு குரோவ் ஞாபகார்த்தப் பரிசைப் பெற்றார். பிறகு, அவர் சைனிய ஒத்துழைப்புப் பயிற்சியில் முதல் ஸ்தானம் வகித்தார்; "ஓல்டு செரமில்" (பிரிட்டன்) அப்பயிற்சியை முடித்துவிட்டு, இந்தியாவில் புதிதாக அமைக்கப்பட்ட நிர். 1, விமானப் படை ஸ்க்வாட்ரனில் அவர் சேர்ந்தார்.

ஏர் மார்ஷல் எஞ்சினியர் விமானப் படையில் தமது "இறகுகளை"ப் பெறுவதற்கு முன்பிருந்தே விமானப் பயிற்சியில் தொடர்பு கொண்டிருந்தார். அவர் தமது 17 வயதில், விமானத்துறையில் இந்தியா இளம் பிராயத்திலும், சர்வதேச விமானப் போக்குவரத்து மார்க்கங்களும் விமானப் போக்குவரத்து சாதன உதவிகளும் பூரணமாக அபிவிருத்தியடையாமலும் இருந்த ஒரு சமயத்தில், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு "[illegible]ப்ஸி-மாத்" ரக விமானமொன்றில் தனியாகப் பறந்து வந்த முதலாவது இந்தியர் என்ற முறையில் ஆகா கான் பரிசைப் பெற்றார்.

வஸீரிஸ்தானில் இந்திய விமானப் படையின் நிர். 1, ஸ்க்வாட்ரனில் அவர் பணியாற்றி வருகையில் பலமுறைகள் அவர் பாராட்டுக்கள் பெற்றார். வட மேற்கு எல்லைப் பிராந்திய நடவடிக்கைகளில் சிறப்பான முறையில் தலைமை தாங்கி வீரச் செயல்கள் புரிந்ததற்காக 1942-ல் அவருக்கு டி. எப். ஸி. விருந்து வழங்கப்பட்டது.

விமானப் படைத் தலைமைக் காரியாலயத்தில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியபிறகு, அவருக்கு 1945-ல் கோஹட், விமானப் படை நிலையத்தின் தலைமை தாங்கும் பதவி அளிக்கப்பட்டது. பிறகு குரூப் காப்டன் அந்தஸ்துக்கும், பின்னர் ஏர் கம்மடோர் அந்தஸ்துக்கும் உயர்த்தப்பட்டு, விமானப் படைத் தலைமைக் காரியாலயத்தின் நிர்வாகப்பிரிவுப் பொறுப்பதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டார். 1948 செப்டம்பரில் அவர் "நிர். 1, ஆபரேஷனல் குரூப்பின்" (தற்போது நடவடிக்கைக் கமாண்ட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது) தலைமைப் பதவியை ஏற்றார். இந்திய விமானப் படையின் எல்லா முன்னணிப் பிரிவுகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருந்த ஒரு பெரிய அணியின் தலைவர் என்ற முறையில், ஜம்மு-காஷ்மீரில் தளங்கொண்டிருந்த தரைப் படைக்கு ஆதரவாக அவர் அனேக விமான நடவடிக்கைகளை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டார்.

அவர், சாம்ராஜ்யப் பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சி முடிந்தவுடன் விமானப் படைத் தலைமைக் காரியாலயத்தில் தொழில் நுட்ப-சாதன சர்வீசுகளின்விமானப் படைப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1952-ல் அவர் விமானப் படையின் துணைத்தலைவராகப் பதவியேற்ற, அடுத்த இரண்டு வருஷங்களில் இந்தோனேஷியாவுக்கு இந்திய விமானப் படையின் நல்லெண்ணத் தூது கோஷ்டி[illegible]லைமை தாங்கிச் [illegible]

அவர் 1933-ல் விமானப் படையில் கமிஷன் பதவி ஏற்றார். வருகிற டிசம்பர் 15-ந் தேதியுடன் அவருக்கு 48 வயது பூர்த்தியாகிறது. அவருடைய நண்பர்கள் அவரை ஏர்மார்ஷல் "அஸ்பி" எஞ்சினியர் என்று பிரியமாக அழைக்கின்றனர். அவர் ஏர் வைஸ்-மார்ஷல் அந்தஸ்தில் 1958 மே மாதம் வரையில் இந்திய விமானப் படையின் துணைத் தலைவராகப் பதவி வகித்து வந்தார்; பிறகு அவருடைய சேவை பெங்களூர் ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலைக்குக்கொடுத்துதவப்பட்டது. அதற்குப் பிறகு ஒரு வருஷத்தில் அவருக்கு ஏர் மார்ஷல் அந்தஸ்து அளிக்கப்பட்டு, அந்த ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டராக நியமிக்கப்பட்டார்.

கனரகத் தொழிற்சாலை

மூன்றாவது திட்டத்தில் தென்னாட்டில் கனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றமைக்க
தகுந்த இடத்தைத் தேர்ந்தெடு[illegible]
ஒரு நிபுணர் குழு திருச்சி மா[illegible]
ட்டத்திற்கு வந்து இங்குசில [illegible]
களைப் பார்வையிட்டு[illegible]
தல்லவா? டிசம்[illegible]
வாரத்தில் மீண்[illegible]
திருச்சிக்கு வரு[illegible]

அண்மையில்[illegible]
திருச்சி நகரச[illegible]
கனரக மின்சா[illegible]
யைத் திருச்சி[illegible]
சாங்கத்தைக்[illegible]
அதற்குத் [illegible]
உதவிகளையும்[illegible]
செய்து தருவத[illegible]
நிறைவேற்றப்பட்[illegible]

ஏற்கனவே[illegible]
மாவட்டங்களில்[illegible]
போய்பார்த்த[illegible]
யற்றவை என்[illegible]
திருச்சியைப்[illegible]
தண்ணீர்ப் [illegible]
சென்னை [illegible]
செய்துள்ள[illegible]
தக்கது. [illegible]
யில் 15 ஆய[illegible]
வாய்ப்பு இரு[illegible]

'ஏழைக[illegible]
கொடுட்[illegible]
கொடு; [illegible]
சோர்ப்போ[illegible]

அ. இ. கைவினைப் பொருள்கள்

தரக்கட்டுப்பாடு

அகில இந்திய கைவேலைப் பொருள்கள் போர்டின் மிக முக்கியமானதும் ஆனல், பலருக்குத் தெரியாததுமான திட்டங்கள் தர அடையாளமிடும் முறையும் ஒன்ரூகும். கைவேலைப் பொருள்களை வாங்குபவர்கள், தாங்கள் வாங்கும் பொருள்கள் நல்லவையா, உண்மையானவைதானுஎன்றுதெரிந்து கொள்வதற்கு உதவும் இந்த திட்டத்தை எல்லா ராஜ்யங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று போர்டு யோசனை தெரிவித்திருக்கிறது. இப்பொருள்களுக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கிராக்கி அதிகரித்திருப்பதால், போலி... பொருள்களின் ... து ...

...வாங்கினல் தரக்கட்டுப்பாட்டு முயற்சி ஊக்கம் பெறும். பல ராஜ்ய சர்க்கார்கள் கூடுமானவரையில் அதைப் பின்பற்றுவது முக்கியமென்று கைவேலைப்பொருள்கள் போர்டு கருதுகிறது.

கேரளா, மேற்கு வங்காளம், மைசூர், ராஜஸ்தான் ஆகிய ராஜ்யங்களில் மரச்செதுக்கு வேலைகள், பெல் உலோகம், தந்தச் செதுக்கு வேலைகள், கலையழகு நிறைந்த உலோகப் பாத்திரங்கள், கம்பளங்கள், கம்பளிப் போர்வை, பின்னல் வேலைகள், அச்சு வேலைப்பாடுகள் ஆகியவை விஷயத்தில் இத்திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

தர அடையாளமிடப்படுகிற கைவேலைப் பொருள்களைத் தயாரிப்பவர்களின் பெயர்களும் வேறு விவரங்களுமடங்கிய புத்தகமொன்றும் வெளியிடப்பட்டிருக்கிறது. ...பாபாரிகளும், ஏற்றுமதியாளர்...ம், உபயோகிப்பவர்களும், ...த்தில் தரம் உயர்ந்த ...க்குமென்றுதெரிந் ...க இப்புத்தகம் ...னுப்பப்பட்டிருக்...

...ணம்

...ளுக்கும்

...து

...க்கும்.

...னம்

...ய்.



இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கம்

ஆப்ரிக்காவில் போர்ச்சுகல் சாம்ராஜ்யம் சரியப் போகிறது. அப்படி அது சரியும்போது இந்தியாவில் போர்ச்சுகல் ஆதிக்கத்திலுள்ள நம் பகுதிகளும் விடுதலை பெறும் என இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் சில தினங்களுக்கு முன்பு பம்பாயில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார். நம் நாட்டில் போர்ச்சுகல் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறத் துடிதுடித்து நிற்கும் பகுதிகளும் அவற்றைப்பற்றிய சில முக்கிய விவரங்களும் பின்வருமாறு :

விஸ்தீர்ணம்

மொத்தம் 1,344 சதுர மைல்கள். கோவா 1,309; டாமன் 21; டையு 14 சதுர மைல்கள் பரப்புள்ளவை. இந்த மூன்று பகுதிகளும் சேர்ந்தே போர்ச்சுகீசிய இந்தியா எனப்படும்.

ஜனத்தொகை

மொத்தம் 6,37,591, கோவா 5,47,448, டாமன் 28,483, டையு 21,138 ஜனத்தொகைக் கொண்டது.

மதங்கள்

ஹிந்துக்கள் 3,88,488 (60.9%), கிறிஸ்தவர்கள் 2,34,292 (36.8%), முஸ்லீம்கள் 14,162 (2.2%), மற்றவர்கள் 649 (0.1%).

இனங்கள்

இந்தியர் 6,38,153, ஐரோப்பியர் (போர்ச்சுகீசியரும் மற்றவர்களும்) 517, யூரேஷியர்கள் 336, ஆப்ரிக்கர் 258, மற்றவர்கள் 327.

மொழிகள்

பெரும்பாலோர் தாய் மொழி கொங்கணி. ஏராளமானவருக்கு மராத்தி தெரி... போர்ச்சுகீசிய மொ... ...கவர்கள்

இலக்கியச் சிறப்பு

"மக்களிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்க இலக்கிய கர்த்தாக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும்" என்று ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் வற்புறுத்தினர்.

புதுடில்லியில் பாரதி சங்கம் என்ற அமைப்பை ஆரம்பித்து வைத்து இவர் சொற்பொழிவாற்றுகையில் இவ்வாறு கூறினர்.

"சரித்திர, கலாசார, பூகோள ரீதிக்காக மக்கள் அனைவரும் ஒன்று என்ற கருத்து மூலம் வழி நடத்தப்பட்டு வருகிறார்கள். இருப்பினும் இந்த உறவை மேலும் பலப்படுத்தவேண்டியது மிக அவசியமாகும்" என்றார்.

அரசியல் அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட 14 மொழிகளின் இலக்கிய கர்த்தர்களைக்கொண்டு இந்தச் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது. ராஷ்டிரபதி பவனத்தில் ஒரு அறையில் இந்த விழா நடந்தது.

"பிராந்திய மொழிகள் எவ்வளவு அவசியமோ அதுபோல தேசிய மொழியும் அத்தியாவசியமாகும். ஒவ்வொரு மொழிக்கும் அதன் இலக்கியத்துக்கும் உரிய இடம் இருக்கிறது. எனவே நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்த மொழிகள் அனைத்தின் அபிவிருத்தியும் தேவைப்படுகிறது. கலாசாரம், இலக்கியத் துறையில் செயலாற்றுவதன் மூலம் தான் பாமர மனிதனின் எண்ணங்கள், உணர்ச்சிகளை ஒருமுகப் படுத்த முடியும்" என்று கூறினர்.

இந்திய சுதந்திர போராட்ட வரலாறு

"இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு" என்ற புத்தகத்தின் முதலாவது பாகம் அச்சிடப்பட்டு வருகிறதென்றும், 1961 ஜனவரி மாதத்தில் அது வெளிவந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், அப்புத்தகத்தின் மற்ற இரண்டு பாகங்களைத் தொகுக்கும் வேலை நடைபெற்று வருகிறதென்றும் மத்தியசெய்தி ஒலிபரப்பு மந்திரி டாக்டர் பி.வி. கேஸ்கர் ராஜ்ய சபாவில் ஓ... ...ர்விக்கு எழுத்து மூலம் ப... ...கையில் கூறினர்.

காகிதப் பணம்

இந்த டிசம்பரில் பாங்கி நோட்டுக்களையும் அஞ்சல்தலைகளையும் அச்சிடுவதில் உலகப் புகழ்பெற்ற தாமஸ் தே லா ரூ கம்பெனி, காகிதச் செலவாணி நாணயக் காட்சியை லண்டனில் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது. பண்டமாற்று முறையில் நடந்த வாணிபம் பணத்தைக் கொடுத்து வாங்கும் வாணிபமாக மாறிய பிறகு, செலவாணி நாணயப் புழக்கத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இந்தப் பொருட்காட்சியை நாணயச் செலவாணியின் வளர்ச்சியை விளக்கிக் கூறும் முறையில் அமைக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு ரோமானியர்கள் காசுகளை அடித்துச் செலாவணி செய்தார்கள். உலகப் பயணம் செய்த மார்கோ போலோ சீன நாட்டில் காகிதப்பணம்புழக்கத்திலிருந்தது என்று தமது பயணக் குறிப்பில் எழுதியிருக்கிறார். ஆதிவாசிகளிடையே சோழிகளையும் மணிகளையும் நாணயமாக உபயோகிக்கும் பழக்கம் இருக்கிறது. திபேத்தில் உண்ணும் பழங்களை நாணயமாகச் செலாவணி செய்யும் பழக்கம் உண்டு.

பதினேழாவது நூற்றாண்டில் 'அண்டிமாண்டு' என்று குறிப்பிடப்படும் கடன் ரசீது தோன்றிற்று. 'கேட்கும்போது திருப்பித் தருகிறேன்' என்ற உறுதிமொழியுள்ள முறிச்சீட்டுக்களை சொல் தவறாத — மக்கள் உபயோகித்தார்கள். அதை உபயோகிப்பதிலுள்ள நன்மைகளையறிந்த வியாபாரிகள் தொலைதூரங்களுக்குச் செல்வோருக்கு திருடர் பயத்திற்கு ஆளாகாமல் செலாவணி செய்து தர முறிச்சீட்டுகளை வழங்கினார்கள். அவைதாம் பிற்காலத்தில் பாங்கிகள் வெளியிட்ட காகித நோட்டுக்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.

பிரிட்டனிலுள்ள தாமஸ் தே லா ரூ கம்பெனி 1860 ஆம் ஆண்டில் முதல் முதலாக மோரிஸ் அரசாங்கத்திற்காக காகித நோட்டுக்களை அச்சடித்தது. அதன் பிறகு, இந்தியா, நேபாளம் உட்பட பல நாடுகளுக்கு காகித நோட்டுக்களை அச்சடித்துக் கொடுத்திருக்கிறது. காகித நோட்டுக்களை அச்சடிக்கத் தொ... வதைக் கொண...

விண்வெளிக்கப்பல்

...களினமான விஞ்ஞான உபகரணங்களுடன் தற்போது பூமியைச் சுற்றும் 5 டன் எடையுள்ள சோவியத் செயற்கைகோள விண் வெளி கப்பலில் இரண்டு நாய்களும் வைக்கப்பட்டுள்ளன. இது தவிர வேறு பல பிராணிகள் புழு பூச்சிகள் தாவர இனங்களும் அதில் உள்ளன. இந்த நாய்களுக்கு செல்கா, முஷ்கா என்று பெயரிடப்பட்டுள்ளன.

சகஜமாகவே விண்வெளிக் கப்பல் இயங்குவதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. நாயின் நடத்தையை டெலிவிஷன் காமராக்கள் பதிவு செய்கின்றனவாம்.

லண்டன் அரு... ...ள்ள ராய்ட்டரின் பதிவு நி... ...ன்விச்
மணிப்படி ...கல்

...ளுக்குத்தான் என்னைவிட அது பற்றி அதிகம்தெரியும் என்று பதிலளித்தார்.

இரு நாய்களும் சாம்பலாயின

வானவெளிக்கப்பலில் பறந்த இரண்டு நாய்களும் எரிந்து சாம்பல் ஆயின!

கடந்த வியாழக்கிழமையன்று 5 டன் எடையுள்ள வானவெளிக் கப்பலை ரஷியா பறக்கவிட்டது தெரிந்ததே! அந்த கப்பலுக்குள் இரண்டு நாய்களையும் நிபுணர்கள் அடைத்து வைத்தார்கள். அவைகளுக்கு வேண்டிய சாப்பாடும் வைக்கப்பட்டது.

ஒரு ராக்கெட்டில் (வாணத்தில்) இந்த வானவெளிக்கப்பலை வைத்து பறக்கவிட்டதும் அறிந்ததே!

வானவெளியில் அது சுற்றும்
... யந்திரக் கோளாறு ஏற்
...ளை ரஷிய நிபுணர்
...லை பூமிக்கு இறக்
...மியில் இருந்து
...சையை தட்டி
...ி வரும்படி
...கப்பல் தயா
...து)

நோக்கி வந்து
வழியில் அது
...னுள் வைக்கப்
இரண்டு நாய்
...யின.

...வியத்
...க் கப்பல்

...ராய்ச்சிக் கப்பல்
...த்திய ரேகை
...து.

...டியிலிருந்து 2
...மீட்டர் உயர
...ர் இந்துமகா
...ந்துவருவதை
முறையாகக்
... இக்கப்பல்
... மேற்பட்ட
...யும் பிடித்

...i Private Ltd., Printers, 55, Chintamani Bazaar, Tiruchy.